மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, அந்தந்தப் பகுதியில் கட்டப்படுகிற வீடுகள் அந்தந்தப் பகுதியில் உள்ள மக்களுக்குத் தான் கொடுக்கப்படுகிறது. விகிதாசார அடிப்படையில் பார்த்தாலும் தாழ்த்தப் பட்ட மக்களுக்குத்தான் அதிகம் இருக்கும். அங்கத்தினருக்கு வேண்டுமானால் விகிதாசாரம் எவ்வளவு என்பதை பின்னால் தெரிவிக்கிறேன் இப்போது என்னிடம் விவரம் இல்லை. ஆனால் 18 சதவிகிதத்திற்கு மேல் தான் தாழ்த்தப் பட்ட மக்களைப் பொறுத்த வரை விகிதாசாரம் இருக்கும். ரூபாய் 500-ஐ அவர்களும் முன் பணமாக இப்படிப்பட்ட தவணை முறையில் சொந்தமாக்கிக் கொள்ளும் வீடுகளுக்குக் கட்ட வேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

State Board for Handicapped.

*195. Q.—Thiru N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Social Welfare be pleased to state—

(a) whether it is a fact that a State Board for physically handicapped has been set up; and

(b) if so, what are its functions?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: (அ) ஆம்; "ஊனமுற்றோருக் கான மாநிலக்குழு" என்பதே அதன் சரியான பெயர்.

(இ) இக் குழுவின் பணிகள் வருமாறு:

(i) தமிழ்நாட்டிலுள்ள உடல் ஊனமுற்றோர், குறிப்பாக பார்வை யற்றோர், செவிட்டு—ஊமையர், கைகால் இழந்தவர்கள், மனவளர்ச்சி குன்றி யவர்கள், தொழு நோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்தவர்கள் அல்லது ஊனத்துடன் குணமடைந்தவர்கள் ஆகியோருக்குப் புதுவாழ்வு அளிக்கும் பிரச்சினையின் அளவைக் கண்டறிதல்;

(ii) அரசுடன் கலந்தாலோசித்து உடல் ஊனமுற்றோரில் பெரும் பான்மையினர் வாழ்க்கை நிலையை உயர்த்துவது, முக்கியமாக மருத்துவம், தொழில், சமூக மறுவாழ்வு வகையில் அவர்களின் நிலையை உயர்த்தும் நோக்கம் கொண்ட பல்வேறு திட்டங்களை வகுத்துச் செயற்படுத்தல்;

(iii) உடல் ஊனமுற்றோருக்குள்ள வேலைவாய்ப்புக்களை கண்டறி வதிலும் அவர்களைக் கூடிய விரைவில் பணியிலமர்த்தவும் வேலை வாய்ப் பகங்களுக்கு உதவி புரிதல்;

1975 மார்ச் 5]

(iv) உடல் ஊனமுற்ற தனி நபர்கள்/கூட்டாகச் செயல்பட்டு வரும் தனி நபர்கள், உடல் ஊனமுற்றோருக்குப் பயிற்சியளித்தல், சொந்தத்தொழில் நடத்துவதற்கு வகை செய்தல், உடல் ஊனமுற்றோரில் பெரும்பான்மையினர் வாழ்க்கையை வளமாக்குவதற்கென்று மேற்கொள்ளப்படும் ஏனைய முயற்சிகள் ஆகிய வகைகளில் உடல் ஊனமுற்றோர் நலன் தொடர்பான பணிகளைச் செய்துவரும் நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு நிதி உதவி அளிப்பது குறித்து பரிசிலனை செய்து நிதியுதவி வழங்குதல்.

(v) உடல் ஊனமுற்றோருக்குக் கல்வியும் பயிற்சியும் மறுவாழ்வும் அளிப்பதில் ஈடுபட்டுள்ள பல்வேறு நிறுவனங்கள் மேற்கொள்ளும் முயற்சி களுக்கு ஒத்துழைப்பு நல்கி அவற்றுடன் இணைந்து செயல்படுதல்;

(vi) மேற்சொன்ன நோக்கங்களை நிறைவேற்றுவதற்குரிய வேறெந்தப் பணிகளையும் மேற்கொள்ளுதல்.

திரு. என். கே. பழனிசாமி: தலைவரவர்களே, முதலமைச்சர் அவர்களின் கீழ் ஒரு போர்டு, ஸ்டேட் போர்டு என்று இப்படி இரண்டு போர்டு இருக்கிறது. இரண்டுக்கும் தனித் தனியாக வேலைகள் என்ன? இவைகள் தனித் தனியாக இருப்பதால் என்ன லாபம்?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: தலைவரவர்களே, உடல் ஊனமுற்றோர் மாநிலக் குழு 4-2-1974 நாளிட்ட 166 எண், அரசாணையில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதில் மாநில அரசு அதிகாரிகள் சிலரும், இந்திய அரசு அதிகாரிகள் சிலரும் மற்றும் குறிப்பிட்டவர்களும் அங்கத் தினராவார்கள். சமூக நலத் துறை அமைச்சர் பெருந்தலைவராக இருந்து, அரசு சமூக நலத்துறைச் செயலாளர் அதன் செயலாளராக இருந்து இந்தக் குழு பணியாற்றி வருகிறது. வேறு ஒரு குழு இருக்கிறது என்றாலும் ஊனமுற்ற வர்கள் என்ற பெயரால் எந்தெந்த வகையில் ஊனம் உடையவர்கள் என்ற அடிப்படையில் உதவி பெறுவதற்குரிய வாய்ப்பைப் பெறலாம் என்பதை பற்றி நுண்ணிய கருத்துக்களைக் கூறுவதற்கென்று உள்ள பிரிதொருகுழு, மத்திய அரசின் அதிகாரிகள், மாநில அரசின் அதிகாரிகள், சேவையில் ஈடுபடுகிற நல்லோர் ஆகியோரைக் கொண்ட குழு மாநில அளவில் செயல் பட்டு வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவரவர்களே, இந்தக் குழுவிலே யார் யார் அங்கம் பெற்றிருக்கிறார்கள்? அவர்கள் எத்தனை ஊனமுற்றவர்களை அரசுக்குச் சிபாரிசு செய்து, அரசு எத்தனை பேர்களுக்குச் சலுகை அளித்தது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : தலைவரவர்களே, யார், யார் இதிலே முறையாக அங்கம் பெற்றிருக்கிறார்கள் என்ற தகவல் இல்லை. பொதுவாக தமிழ் நாட்டில் ஊனமுற்றோர்கள் என்ற அடிப்படையில் இருக்கிற எண்ணிக்கையினுடைய விகிதம் 230 ஆயிரம் ஆகும். தற்போது திட்டத்தினால் பயன் பெறுகிறவர்கள் 22 ஆயிரம் பேர்கள். படித்த உடல் ஊனமுற்றோர்கள் எண்ணிக்கை 23.9 சதவீதம் ஆகும். கல்வி அறிவு இல்லாத உடல் ஊனமுற்றோர்கள் எண்ணிக்கை 69.3 சதவீதம் ஆகும். தற்சமயம் படித்த உடல் ஊனமுற்றோர்கள் எண்ணிக்கை 5.81 சதவீதமும் ஆகும். இவர்கள் எப்படி பயிற்சி பெறுகிறார்கள் என்றால், இந்தத் திட்டம் எவ்வாறு வழி வகை செய்கிறது என்றால், உற்பத்தி தொழில் கூடம் நிறுவுவதில் இவர்கள் பயிற்சி பெறுகிறார்கள், மற்றும் தொழில் நிறுவனங்களில், அரசு போக்குவரத்து நிறுவனங்களிலே மற்றும் அரசுத் துறை பிரிண்டிங் பிரஸ்ஸிலே இவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. கைத்தறி நெசவுப் பயிற்சி, மற்றும் மாநில அளவிலே இருக்கிற மற்ற விசைத் துறை பயிற்சிகள், சுருட்டு, பீடி போன்ற தொழில்களில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றன.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, இந்தக் குழு எத்தனை ஊனமுற்றோர்களுக்குச் சலுகை தர வேண்டுமென்று சிபாரிசு செய்திருக்கிறார்கள். அதை அங்கீகரித்த அரசு எத்தனை பேர்களுக்கு இது வரையில் செய்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன். அவர் அளித்த பதில் நான் கேட்ட கேள்விக்குப் பதில் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : தலைவரவர்களே, இந்தக் குழுவின் பரிந்துரை மூலம் 22 ஆயிரம் பேர்கள் பயன்பெற இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சீர்திருத்தப் பள்ளிகள்.

*** 196. வினா—டாக்டர் எச். வி. ஹாண்டே :** மாண்புமிகு சமூகநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சீர்திருத்தப் பள்ளிகளில் தற்போது பணிபுரியும் ஆசிரியர்கள் எண்ணிக்கை என்ன ?